**தலைப்பு 25 - எல்லை நிர்ணய ஆணைக்குழு**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.1 அபிப்பிராயம்

---------------------------

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2020 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 10 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2019 திசெம்பர் 3 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்ககூடியதாக இருந்த போதிலும், அந்த தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இறுதி திறைசேரி கணனி கணக்கு அறிக்கைகள் பின்னிணைப்புகளாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் 3.1ஆம் பந்தியின் பிரகாரம் இறுதி திறைசேறி கணனி கணக்குகள் பின்னிணைப்புகளாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | இவ்வான குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வருமானங்கள், செலவினங்கள் மற்றும் ஏனைய பிரதான பேரேட்டு மீதிகளின் பெறுமதிகள் பல்வேறு படிவங்களில் கிட்டிய ரூபாயில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வருமானங்கள், செலவினங்கள் மற்றும் ஏனைய பிரதான பேரேட்டு மீதிகளின் பெறுமதிகள் கிட்டிய ரூபாயில் குறிப்பிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறிக்கைகளை தயாரிக்கும் போது இவ்வான குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

ஆணைக்குழுவினால் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வு அஅவதானிப்புகளின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உத்தியோகத்தர்கள் கடமைகளுக்காக அலுவலகத்திலிருந்து வெளியே செல்லும் போது மற்றும் மீய வருகைதரும் போது அது தொடர்பில் பதிவு செய்வதற்கு வெளிச்செல்லல் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | வெளிச்செல்லல் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பேண நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) பொருட்களை விநியோகித்தல் தொடர்பான விபரங்கள், பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பொருட்களை பெற்றுக்கொள்ளல், விநியோகித்தல் தொடர்பான விபரங்கள், பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பொருட் பதிவேட்டு புத்தகத்தில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

| **அவதானிப்புகள்** | | **பரிந்துரைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | |
| (i) நிதிப் பிரமாணம் 138(8) | மேலதிக நேர படி கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலை மற்றும் அலகுகள் தொடர்பான விபரங்கள் மற்றும் செய்வேலை விபரங்கள் குறிப்பிடப்பட்டிராத போதிலும், மேலதிக நேர கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுபடுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டது. |
| (ii) நிதிப்பிரமாணம் 264 | பழுதுபார்த்தல்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்குரிய பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், பணம் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக்கொண்டமைக்காக கொடுப்பனவு உறுதிச்சீட்டில் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களின் அலுவலகங்களுக்கு வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றை பதிவு செய்வதற்காக விரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்தி, குறித்த விரலடையாள இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் 2019 செப்தம்பர் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட போதிலும், அதற்கான கூறுவிலைகள் முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை. அரசினால் அத்தியாவசியமான கொள்வனவுகளை மாத்திரம் மேற்கொள்ளுமாறு 2019 செப்தம்பர் 24 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 5/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தப்பட்டமையால், குறித்த கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொண்டு முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்றாக பேணப்படக்கூடிய வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேடும் உரிய முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. | வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேடும் உரிய முறையில் பேணப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் அந்த குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 02 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிராகாரம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 08 ஆந் திகதிய பாதீட்டு சுற்றறிக்கையின் 03/2019 இன் 6 ஆம் பந்தியின் பிரகாரம், வெளிநாட்டு பயணங்களை கட்டுப்படுத்துவதற்கும், குறைப்பதற்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. ஆதனக் கடன்களை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் சபையில் தற்போது காணப்படாததுடன், கடன் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்று வந்தால் அல்லது தற்போது உள்ள உத்தியோகத்தர் ஒருவர் ஆதனக் கடனை பெற்றுக்கொண்டால், எனும் விடயங்களை கருத்திற்கொண்டு ஒரு தொகை பணம் இந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த மதிப்பீட்டு ஒதுக்கத்தின் |

| | | |
|---|---|---|
| | | போது இந்த சேமிப்பு தொடர்பில் கருத்திற்கொண்டு தயாரிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------

**3.1 பெறுகைகள்**

-------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ------------------------------------ | -------------------- | ------------------------------ |
| 2019ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தில் ஆண்டினுள் 5 பணிகளை நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ள போதிலும், அவற்றுள் 2 பணிகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 570,000 ஆக காணப்பட்டதுடன், மேற்படி 2 பணிகளுக்கான செலவினம் ரூபா 264,110 ஆனமையால், நிதி முன்னேற்றம் 46 சதவீதம் ஆகும். | 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தின் பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 செப்தம்பர் 24 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 5/2019 இன் 3 ஆம் பந்தியின் பிரகாரம் அத்தியாவசியமான அலுவலக உபகரணங்கள் மாத்திரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் 2 பணிகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. |

## 3.2 ஏனைய அவதானிப்புகள்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களுக்காக ரூபா 15,875,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஆண்டிற்கான மொத்த செலவினம் ரூபா 12,849,555 ஆகும். சட்டவாக்க நிறுவனத்தினால் தற்போது திட்டவட்டமாக பணியொன்று ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தமையால் ரூபா 12,849,555 ஆன செலவினத்தின் செயலாற்றல் தொடர்பில் திருப்தியடைய முடியாதிருந்தது. | நிறுவனத்திற்காக திட்டவட்டமான பணிப்பொறுப்பொன்று காணப்பட வேண்டும். | சட்டவாக்க நிறுவனத்தினால் திட்டவட்டமான பணிப்பொறுப்பொன்று ஒதுக்கப்பட்டிராமையால், எதிர்காலத்தில் அவ்வாறான எல்லை நிர்ணய பணிகளில் சபை ஈடுபடுவதுடன், சட்டவாக்க நிறுவனத்தினால் பல்வேறு சந்தர்ப்பங்களில் திட்டவட்டமான பணிப்பொறுப்பினை வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கு இது வரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (ஆ) | ஆணைக்குழுவின் வானகமொன்று 2019 சனவரி மாதத்தில் 60 கி.மீட்டர்கள் முதல் 410 கி.மீட்டர்கள் | நாளாந்த ஓட்டக் குறிப்புகள் உரிய முறையில் நாளதுவரையாக | மாகாண சபை தேர்தல் பிரிவுகளின் எல்லைகளை நிர்ணயித்தல் தொடர்பில் அறிவுறுத்தும் போது |

| | | |
|---|---|---|
| வரையிலும் 8 நாட்களினுள் ஓட்டத்தில் ஈடுபட்டிருந்த போதிலும், நாளாந்த ஓட்டக்குறிப்புகளில் எந்த பணிக்காக பயணம் மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | பேணப்பட வேண்டும். | கடமைகளுக்கு பிரதேச செயலகத்திற்கு தகவல்கள் அடங்கிய கோவைகளை கொண்டு செல்ல வாகனம் பயன்படுத்தப்பட்டது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

-------------------------------------------

2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சிரேஷ்ட மட்டத்திலான அங்கீகரிக்கப்பட்ட இரண்டு பதவிகளுக்காக பதிற்கடமை உத்தியோகத்தர்கள் இருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இரண்டாம் நிலையிலான அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் ஏழில் ஐந்து வெற்றிடமாக காணப்பட்டது.